<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 25.02.2026. அ.வ.எண். 183/2020   வா.சா.1.ரத்தினசாமி, த/பெ. பழனிக்கவுண்டர்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) 1 ம் பிரதிவாதி பழனிச்சாமி எனது உறவினர் என்றால் சரிதான்.  இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டியஅவசியம் எனக்கு எப்போது வந்தது என்றால் எனது இடத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்தார். அதனால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன். தற்போதும் இந்த வழக்கை நடத்த வேண்டிய அவசியம் உள்ளதா என்றால் உள்ளது. எனது இடம் எனக்கு வேண்டும். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்  எனது இடம் எனக்கு வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) இந்த வழக்கில் 2 அயிட்ட சொத்துக்களை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதில் தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான் அந்த இடத்தை மட்டும் தான் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். 2 வது அயிட்ட சொத்துக்களை முழுவதும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா என்றால் முழுவதும் கிடையாது 10 அடி மட்டும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தாவா 1 வது அயிட்ட சொத்தின் ஒரு பாகம் தான் தாவா 2 வது அயிட்ட சொத்து என்றால் சரியல்ல,.

3) தாவா 1 வது அயிட்ட சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் பூர்வீக சொத்து ஆகும். எப்படி பாத்தியம் என்றால் எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் வழக்கு தாக்கல் செய்து அதன் மூலம் வந்த சொத்து ஆகும். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.  எனது தகப்பனாருக்கு வந்த சொத்துக்களை ஒரு கந்தசாமி

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

கவுண்டருக்கு பரிவர்த்தனை செய்து தாவா சொத்துக்களை பெற்றார் என்றால் சரிதான்.

4) பரிவர்த்தனை பத்திரத்தின் அடிப்படையில் வந்த சொத்துக்களை தான் எனது தாயாரும் சகோதரியும் எனக்கு விடுதலை கொடுத்தார்கள் என்றால் சரிதான். வா சா ஆ 1 ஆவணத்தின் படி எனது தகப்பனாருக்கு எவ்வளவு செண்ட் பூமி வந்தது என்றால் தெரியாது. பரிவர்த்தனை பத்திரத்தின் அடிப்படையில் வந்த சொத்துக்களை தான் எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு விடுதலை பத்திரம்மூலம் எனக்கு கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா 1 வதுஅயிட்ட சொத்தில் வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன்.

5) மேற்படி அனுமதி பெறுவதற்கு எனது பெயரில் இருந்த வருவாய்துறை ஆவணங்களை கொடுத்து மேற்படிஅனுமதி பெற்றேனா என்றால் கொடுத்தேன். வருவாய்துறை ஆவணங்கள், பஞ்சாயத்து அனுமதி ஆகியவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கட்டியுள்ள வீட்டின் சுற்றுச்சுவருக்கு வெளியேதான் தாவா 2 வது அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த சுற்றுச்சுவரை இடித்துவிட்டு தான் புதியதாக சுற்றுச்சுவர் கட்டடப்பட்டது என்றால் ஆதியில் சுற்றுச்சுவர் கிடையாது.

6) தாவா 2வது அயிட்ட சொத்து வருவாய்துறை ஆவணங்களில் நத்தம் காலியிடம் என்று உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா 2 வது அயிட்ட சொத்திற்கான வருவாய் துறை ஆவணங்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். அது அரசு புறம்போக்கு நிலம் என்பதால் தான் அந்த ஆவணங்களை நான்

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி பழனிச்சாமி குடியிருந்து வரும் இடம் 3–4 தலைமுறைகளாக இருந்து வரும் இடம் என்றால் சரியல்ல . 1 வது பிரதிவாதி பழனிச்சாமியின் தாத்தா பெயர் என்ன என்றால் தெரியாது.

7) 1 ம் பிரதிவாதி பழனிச்சாமி குடியிருந்து வரும்இடம் முதலில் யாருக்கு சொந்தமானது என்றால் அவரது அப்பா வழி பாட்டிக்கு சொந்தமானது. அந்த பாட்டிக்கு எந்த வகையில் மேற்படி சொத்து சொந்தம் என்பது தெரியாது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரிடம் நான் தாவா 2 வது அயிட்ட சொத்து என்னுடையது என்று கூறியதின் பேரில் அவரது அறிக்கையில் வாதியின் சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, ஆவணங்களே எங்கள் பேரில் தான் உள்ளது.

8) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையின் விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் நீதிமன்ற ஆணையரே வரவில்லை. எனது வழக்கறிஞர் மட்டும்தான் வந்தார். அவ்வாறு நான்சொல்வது தவறு என்றும் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவையருடன் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் அதற்கு நாங்கள் எவ்வித ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை எங்களுக்கு விரோதமாக இருப்பதால் தான் நீதிமன்ற ஆணையரே வரவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9) தாவா 2வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிகள் கட்டிடம் ஏதேனும் கட்டுவதற்கு அஸ்திவாரம் போட்டார்களா என்றால் இல்லை, ஜே சி பி வைத்து நிறவிவிட்டார்கள். எல்லைக்கல்லை எடுத்துவிட்டார்கள். அவ்வாறு நான்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சொல்வது பொய் என்றும் , வழக்கிற்காக கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கக்கடவு கிராமத்தில் எனக்கு விவசாய பூமிகள் உள்ளது என்றால் சரிதான். 1 வது பிரதிவாதிக்கும் கக்கடவு கிராமத்தில் விவசாய பூமிகள் உள்ளது என்றால் சரிதான். அவரது விவசாய பூமிக்கு செல்வதற்கு எனது பூமியின் வழியாக தட பாத்தியம் அனுமதி கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல.

10) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1 ம் பிரதிவாதி அவரது பழைய வீட்டை இடித்துவிட்டு தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு தென்புறம் உள்ள இடத்தில் வீடு கட்ட சுத்தம் செய்தார் என்றால் சரிதான். பழைய வீட்டை இடித்து சுத்தம் செய்யும் வரை நான் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். அப்போது நான் வீட்டிலேயே இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஜே சி பி வைத்து நிறவியது சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்க சென்றேன் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படிகூறிவிட்டார்கள். மேற்படிபுகாரை நான் தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் நான் சொல்வது போல் சம்பவமே நடைபெறாததால் தான் புகார் கொடுக்கவில்லை என்றும் கொடுக்காத புகாரை தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11) தாவா 2 அயிட்ட சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பது தான் எனக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் தகராறு என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்து அளப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அவ்வாறு

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

அளந்திருந்தால் தாவா 2 வது அயிட்ட சொத்து நத்தம் புறம்போக்கு என்று தெரிந்திருக்கும்என்றால் சரியல்ல. 1 வது பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடு கட்டாமல் காலியாக தான் உள்ளது என்றால் தெரியாது. தாவா 2 அயிட்ட சொத்திற்கு கடைசியாக நான் எப்போது சென்றேன் என்றால் நான் குடியிருப்பதே அங்கு தான்.

12) இன்று வரை தாவா 2 வது அயிட்ட சொத்து எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்தை ஒட்டியுள்ளது தான் 1 வது பிரதிவாதியின் இடம் என்றால் சரிதான். உண்மையாகவே நான் தாவா 1 வது அயிட்ட சொத்தில் இருந்திருந்தால் 1 ம் பிரதிவாதி வீடுகட்டியுள்ளாரா இல்லையாஎ ன்ற விவரம் தெரிந்திருக்கும் நான் தாவா சொத்தில் சுவாதீனத்திலேயே இல்லாததால் தான் வீடு கட்டியுள்ளாரா என்றுதெரியவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்ததால் தான் 1 ம் பிரதிவாதி வீடு கட்டாமல் இது நாள் வரையில் தடை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. இது நாள் வரை 1 ம் பிரதிவாதியின் இடம் காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியிடம்அவரது இடத்தை குறைந்த விலைக்கு கேட்டு அவர் மறுத்ததால் தான் இந்த வழக்கை பொய்யான சங்கதிகள் கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்துகளுக்கும் முன்மூல ஆவணங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல, அதனால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் பரிகாரம் கோர நான்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தகுதியற்றவர் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பரிவர்த்தனை பத்திரத்தின் படி வந்த சொத்துக்களை விட கூடுதலாக சேர்த்து விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல, அதனால் வா சா ஆ 2 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்து நத்தம்புறம்போக்கு என்பதால் அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி